செ.வெ.எண்.392 நாள்.10.08.2017

காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது சுகாதாரத் துறையுடன் இணைந்து நடத்திய மாபெரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு

காஞ்சிபுரம் பெருநகராட்சி பொதுசுகாதாரத்துறையுடன் இணைந்து நடத்திய மாபெரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு இன்று 10.08.2017 அன்று காஞ்சிபுரத்தில் அண்ணா கலையரங்கத்திற்கு அருகே நடைபெற்று, இதன்படி டெங்கு பற்றிய விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 12 குழுக்களாக பிரிக்கப்பட்டு அவை முறையே

** 12 நடமாடும் மருத்துவ காய்ச்சல் தடுப்பு மற்றும் சிகிச்சை மருத்துவக்குழு

** 12 குளோரினேசன் குழு

** 12 முதிர் கொசுக்களை கொல்லும் நவீன புகைமருந்தடிக்கும் எந்திரத்துடன் கூடிய குழு

அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுக்களுக்கும் ஒரு தெரு வீதம் பிரிக்கப்பட்டு அவை 1 முதல் 12 குழுக்களாக பிரிந்து

குழு 1 விளக்கடி கோயில் தெரு

குழு 2 எண்ணெய்க்கார தெரு

குழு 3 ஆலடி தோப்பு தெரு

குழு 4 வேகவதி தெரு

குழு 5 சோளீஸ்வரர் தெரு

குழு 6 ஒ□முகமதுபேட்டை

குழு 7 நாகலூத்துமேடு

குழு 8 லாலா குட்டை தெரு

குழு 9 வரதராஜபுரம்

குழு 10 காமாட்சியம்மன் சன்னதி தெரு

குழு 11 சின்னகாஞ்சிபுரம்

குழு 12 பல்லவர் மேடு

மேற்கண்ட குழுக்கள் வீடுவீடாகச்சென்று காய்ச்சலை கண்டறிந்து சிகிச்சையளிக்கவும், மக்களுக்கு ஏடீஸ் கொசுகளை அகற்ற தங்கள் வீடுகளில் தேவையற்ற கொசு உற்பத்தியாகும் பொருட்களை அகற்றிடவும், குடி தண்ணீரில் குளோரினேசன் கலக்கவும் மேலும் 12 விஷேச புகையடிப்பான் இயந்திரங்கள், மூலமாக முதிர் கொசுக்களை அழிக்கவும் டெங்கு காய்ச்சல் பற்றிய தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.சௌரிராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை கூடுதல் இயக்குநர், மரு.என்.சித்ரா, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை, இணை இயக்குநர், மரு.ஜி.தாமரைச்செல்வி, பெருநகராட்சி ஆணையாளர் திரு.அ.சர்தார், சுகாதாரப்பணிகள், துணை இயக்குநர் மரு.டி.செந்தில்குமார், மாவட்ட மலேரியா அலுவலர், வட்டார மருத்துவ அலுவலர்கள், பெருநகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் பெருநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.